

# பயணம்

இதழ் - 15 அக்டோ-2019

***ஸ்ரீ அண்ணன் சுவாமிகளிடம் சமர்ப்பிக்கப்படுகிறது--இறை நாட்டம் கொண்ட அன்பர்களுக்காக.....**

www.sriannanswamigal.com

www.sriannanswamigalmobile.in

‘Sri Annan Swamigal’ in Google Play Store

**முன்னுரை**

இறைவனை நாடுபவர்கள்,பெரும்பாலும் தனது ஆரம்ப நாட்களில் பல குழப்பங்களுக்கு ஆளாகின்றனர். தூசி படிந்த அறையை சுத்தம் செய்ய முற்படும்போது பெரும் புழுதி கிளம்பி முன்பிருந்த வெளிச்சத்தையும் மறைப்பது போல ,ஆத்ம சாதகனுக்கு தற்காலிக இருளும், மயக்கமும் ஏற்படுகிறது. அப்போதெல்லாம் அவனுக்கு துணை, குருவின் அரவணைப்பு மட்டுமே. குருவருளும், இறையருளும் யாருக்கு கிடைக்கின்றதோ.. அவர் பேறு பெற்றவர். அவ்வாறு அருள் கிடைக்க ஒரு சாதகன் தன்னை தயார் படுத்திக்கொள்வது மிகவும் அவசியம். இறைவனே எல்லாம் செய்வான் எனக்கு, என தமோ குண தாக்கத்தில் ஒருவன் உறங்கிகொண்டிருந்தால், மேலும் மயக்கத்தில் ஆழ்ந்து போவான். எனவே தேடலின் தீவிரம், சரணாகதியின் அவசியம்,இறைவன் நம்மை ஆட்கொள்ளும் விதம்,குருவின் அவசியம், குருவின் மகிமை, குருவின் அருள், இவற்றை பற்றி நன்றாக உணர்ந்து தெளிந்த

மஹாத்மாக்களின் அனுபவங்களையும், இந்த இதழில் இருந்து இந்திய இறையாண்மை பற்றிய முக்கிய செய்திகளையும் இங்கு நாம் தருகிறோம்.இவை ஆத்ம சாதகர்களுக்கு, இறைஞான தரிசனம் என்ற பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கும் மேலும் நம் தேசத்தின் இன்றைய சமூக, ஆன்மீக விடயத்தின் நிலைமையும் ஓரளவு புரிந்துகொள்ள இவை உதவியாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

- இணைய நிர்வாகிகள்

# உள்ளே

| படைப்புக்கள் | பக்கம் எண் |
| --- | --- |

சித்தர்கள் வேத மறுப்பாளர்களா: 05-17

காஷ்மீர், 370 வது சட்டப்பிரிவு: 18-40

# சித்தர்கள் வேத மறுப்பாளர்களா:

**( சுகிசிவம் கருத்துக்கு எதிர்வினை )**

- <u>அரவிந்தன் நீலகண்டன்</u>

**( நன்றி- தமிழ் இந்து )**

பேராசிரியர் டி.என்.கணபதி எழுதிய 'தமிழ் சித்தர் மரபு' என்கிற நூலை துணைக் கொண்டு பேசுகிறார் ஐயா பேச்சு வியாபாரி அவர்கள். அந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. 2004 இல் தமிழில் வந்தது. **2004** நூலுக்கு ஒருவர் அணிந்துரை எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்கிறார்: "பொதுவாகச் சித்தர்களைப் பற்றி உயர்வாக ஒரு கருத்து இருந்தாலும் எதிர்கருத்தும் மிக வலுவாகவே சமூகத்தில் நிலவுகிறது. அவர்கள் நாத்திகர்கள், பிராமண எதிர்ப்பாளர்கள், வேத

நெறியின் விரோதிகள் , முறை கேடான இரகசிய வழிபாடுகள் உடையவர்கள், சிற்றின்ப உலகியல் தேவைக்கு பேராற்றலை வீணடிப்பவர்கள், பயமுறுத்தும் பாங்கினர் என்று பலப்பல குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது உண்டு. இவற்றைத் தக்க ஆதாரங்களுடன் உடைத்தெறிகிறார் பேராசிரியர். சித்தர்கள் மரபு வேத நெறிக்கு எதிரானதல்ல, சடங்கு நெறிக்கு எதிரானது என்பதை நிறுவுகிறார்."

இன்னொருவர் 2019 இல் ஒரு காணொளியில் பேசுகிறார்: "நான் சொன்னதுக்கு ஆதாரம் கேட்குறாங்க, நான் ஒரு சின்ன விஷயம் சொல்றேன். ஹ்ம்ம்ம் (மோட்டுவளையை பார்க்கிற பாவனை, யோசிக்கிறாராமாம்) சித்தர்கள் யாரு? அவர்கள் வேதத்தை ஒப்புக் கொண்டவர்களா? வேத மறுப்பாளர்களா?

ஸ்ட்ரைட்டா நீங்க நல்லா யோசிச்சு பாருங்க. சித்தர்கள் வேதத்தை ஒத்துக் கொண்டிருந்தா அவங்க பாடும் போது இப்படி பாடுவாங்களா? ’சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே! வேர்த்துஇரைப்பு வந்தபோது வேதம்வந்து உதவுமோ?’ இன்னும் சில பாடல்கள் என்னால சொல்லவே முடியாது அந்த அளவுக்கு சில பாடல்கள் சித்தர்கள் வேத மரபை கேலி செய்து பேசியிருக்காங்க. இன்னும் ஒரு படி மேல போய் ‘கோவிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா?’ நான் அந்த லெவலுக்கு நியாயப்படுத்தலை. நல்லா கவனிக்கணும். அவங்க என்னா நினைக்கிறாங்க ஒரு மனிதன் தனக்குள்ள இறைவனை உணரணுமே ஒழிய ஒரு கோயில் ஒரு பிம்பம் அப்படீன்னு போய் அதுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீங்கங்கிற கருத்தை

பேசுறாங்க. யாரு ? சித்தர்கள். ‘சித்தர்களுக்கு வந்து சரியான பேரு என்ன தெரியுமா? ‘தமிழ் சித்தர் மரபு’ அப்படீங்கிற புத்தகத்துல பேராசிரியர் டி.என்.கணபதி எழுதுறாரு ‘கலகக்கார மரபு’ அப்படீங்கிறாரு. அவுங்க ரிபெல்ஸ் ரிவெல்யூஷனரீஸ் இப்ப எதுக்கு சித்தர்களை பத்தி பேசுறேன்னு யோசிக்கிறீங்களா (எள்ளல்)...அந்த சித்தர்களின் தலைவன் முருகப் பெருமான் சித்தநாதன். இப்ப வேதத்தை ஆதரிக்கிற ஒருவன் வேதத்தை எதிர்க்கிற மரபுக்கு தலைமை தாங்க முடியுமா? தமிழ்நாட்டு வழிபாடு சித்தர் வழிபாடு. அந்த சித்தர்களின் பெருந்தலைவனாகக் கருதப்படுகிறவன் முருகக் கடவுள்.’

காணொளியில் ‘வேதத்தை எதிர்க்கிற மரபு’ என்று சித்தர் மரபை அடையாளப்படுத்தி

அதுதான் தமிழ் மரபு என்று சொல்லுகிற ஆசாமி யார் என்பதை சட்டென்று சொல்லிவிடுவீர்கள். வேறு யாருமில்லை. பேச்சு வியாபாரி சுகி.சிவமேதான். ஆனால் 2004 இல் பேரா.டி.என்.கணபதியின் ‘தமிழ்ச்சித்தர் நூல்’ அணிந்துரையில் சித்தர் மரபு வேதநெறிக்கு எதிரானதல்ல என்பதை பேராசிரியர் தக்க ஆதாரங்களுடன் உடைத்தெறிகிறார் என சிலாகித்தவர் யார் என்கிறீர்கள்? அதே அதே அதே சுகி.சிவமேதான்.

நாக்கு என்று மட்டுமில்லை, எழுதும் கையிலும் சிலருக்கு நரம்பிருப்பதில்லை. செல்வம் கொட்டுகிறதா இல்லையா? அது போதுமே. சான்ஸ் கிடைக்கும் என்றால் புகழ் கிடைக்குமென்றால் எப்படி என்றாலும் பேசலாம் எழுதலாம். யாருக்கும்

வெட்கமில்லை.

சரி. உங்களுக்குத் தெரியுமா? ஆதி சங்கர பகவத்பாதர் சமஸ்கிருத இலக்கண மறுப்பாளர். ஆமாம்! நம் பேச்செழுத்து வியாபாரியின் தர்க்கத்தை அனுசரித்து சொன்னால் அப்படித்தான் சொல்ல வேண்டும். வேண்டுமென்றால் பாருங்களேன். ஆதி சங்கரர் ‘பஜ கோவிந்தத்தில்’ என்ன சொல்கிறார்? ‘ஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே நஹி நஹி ரக்ஷதி டுக்ருஞ்கரணே’ என்கிறார். அதாவது இறுதி காலத்தில் வேர்த்துஇரைப்பு வந்தபோது வியாகரணம் வந்து உதவுமோ என கேட்கிறார். அப்போது அவர் இலக்கண மறுப்பாளராகத்தானே இருக்க வேண்டும்? ‘சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே! வேர்த்துஇரைப்பு வந்தபோது வேதம்வந்து

உதவுமோ?’ என்று சிவவாக்கியர் கேட்பதால் அவர் வேத மறுப்பாளர் ஆகிவிடுவார் என்றால் வியாகரணம் உதவுமா என்று கேட்கிற ஆதி சங்கரர் இலக்கண மறுப்பாளர் தானே? என்ன கொடுமை இது சரவணா? (ஒரிஜினல் சரவண பொய்கை சரவணனை சொன்னேன்).

சிவவாக்கியரை கொஞ்சம் ஆழ்ந்து படித்தாலும் தெரியும். அவர் வேதத்தை ’மறுக்க’வில்லை. வேத நெறியை எதிர்க்கவும் இல்லை. உள்ளர்த்தம் புரியாமல் அதனை உள்நோக்கிய ஆத்மானுபவத்துக்கான கருவியாக்காமல் செய்யாதே என்கிறார். ‘ஓதுகின்ற வேதம்எச்சில்’ என்கிறார். பார்த்தாயா வேதத்தை எச்சில் என்று சொல்லிவிட்டார் எப்படிப்பட்ட வேத மறுப்பாளர்! அடுத்த இரண்டாம் வரியில் மதியும் எச்சில் ஒளியும் எச்சில் என்கிறார். எனவே அவர்

வேத மறுப்பாளர் மட்டுமல்ல. ஒளி மறுப்பாளரும் கூட என்று சொன்னால் எவ்வளவு அபத்தமோ என்று எழுதும் போதே, ’ஒளி என்றால் நெருப்பு. எச்சில் என்றால் நீர். எனவே ஆரிய ஒளியே திராவிட நீர்தான் என்று சிவவாக்கியர் சொல்லுகிறார்’ என்று அடுத்து எழுத்து வியாபாரி காணொளி படைப்பாரோ என்று மனம் திடுக்கிடாமல் இல்லை.

இன்னும் இரு வரிகளை எடுப்போம்:

‘விண்டவேதப் பொருளைஅன்றி வேறு கூற வகையிலாக் கண்டகோயில் தெய்வம் என்று கையெடுப்ப தில்லையே.’

சிவவாக்கியர் வேத மறுப்பாளரென்றால் இந்த வரியை எப்படி பொருள் கொள்ளலாம்? வேதம் என்பதே கூட திரண்டு வந்த தூமையே என சொல்லும் அதே சிவவாக்கியர் ‘விண்பரந்த

மந்திரம் வேதம்நான்கும் ஒன்றலோ' என கூறுவதையும்,

'சிந்துநீ தெளிவும்நீ சித்திமுத்தி தானும்நீ
விந்துநீ விளைவுநீ மேலதாய் வேதம்நீ
எந்தைநீ இறைவன்நீ என்னை ஆண்ட ஈசனே'

என்று வேதமாக ஈசனே இருப்பதை கூறுவதையும் நாம் கணக்கில் எடுக்க வேண்டும்.

ஒரு விஷயத்தை நம் பேச்செழுத்து வியாபாரிகள் புரிந்து கொள்ள வேண்டும். வேதமே தன்னை தானே பகடி செய்யும் தைரியம் கொண்ட நூல்தான். தன் தெய்வங்களை தானே கேள்வி கேட்கும் தைரியம் வேத ரிஷிகளுக்கு உண்டு. சாந்தோக்கிய உபநிடதத்திலும் அதை காணலாம். எனவே வேதத்தை கிண்டல்

செய்வதும் சரி, வேதத்தை குறிப்பாக கர்ம காண்டத்தை ஒரு அக பயிற்சியாகக் கொள்ளாதிருப்பதையும் கண்டனம் செய்வதையும் சரி, வேத மறுப்பு என கொள்வது மரபினை அரைகுறையாக தெரிந்து கொள்வதோ, அல்லது அரசியல் ஆதாயங்களுக்காகவோ அல்லது மதமாற்ற சக்திகளுக்கு துணை போக வேண்டுமென்றே திருட்டுத்தனம் செய்வதோதானே தவிர, உண்மை அல்ல. ஆழ்ந்த ஆராய்ச்சியும் அல்ல. வெறும் சீமான் தனமான மேடை ஆபாசம் மட்டும்தான் அது.

சரி இனி முருகருக்கே வருவோம். என்ன சொன்னார்? முருகன் சித்தர்களின் தலைவர் சார். எப்படி சார் அவர் வேத மறுப்பாளர்களுக்கு தலைவராக இருக்க முடியும்?

மகாபாரதத்தில் பீஷ்ம பர்வத்தில் ஒரு அழகான துதி உள்ளது. அர்ஜுனர், கிருஷ்ணரின் வழிகாட்டுதலினால், தேவியை துதிக்கிறார். அருமையான அந்த துதி ஒவ்வொரு இந்துவும் கட்டாயம் மனனம் செய்ய வேண்டிய துதி. அதன் தொடக்கம்:

’நமஸ்தே சித்த சேனானி ஆர்யே மந்தார வாசினி

குமாரி காளி காபாலி கபிலே கிருஷ்ண பிங்கலே …’

அன்னையின் பெயர் என்ன? சித்த சேனானி. அவள் சித்தர்களை சேனையாக கொண்டவள். அவள் ஆர்யை .. அந்த துதி பாடலில் அர்ஜுனன் சொல்கிறார். அவளது த்வஜம் என்ன தெரியுமா? அது மயில் தோகை பீலிகளால் ஆனது. அவள் யார்? அவள் ஸ்கந்த மாதா. கந்தனின் அன்னை.

மட்டுமல்ல அவள் சாவித்ரி, சரஸ்வதி, வேத மாதா, வேதங்களின் அந்தராத்மாவாகவும் இருப்பவள் அவளே.

முருகனின் அன்னை சித்த சேனானியாகவும் வேதமாதாவாகவும் வேதத்தின் ஆத்மாகாவும் இருப்பாள் என்றால் முருகன் சித்த சேனனாகவும் சுப்ரமணியனாகவும் ஏன் இருக்க முடியாது? அதற்கு எதற்கு ஆரிய திராவிட இனவாதமும் அதன் ஒருங்கிணைப்பு என்கிற கதையும் வர வேண்டும்?

தான் தப்ப வேண்டும் என்கிற ஒரே காரணத்துக்காக தான் எழுதியதற்கு, அதுவும் அவர் தன்னை எவருடைய ‘வகுத்த மாணவன்’ என்று சொன்னாரோ அவருடைய நூலுக்கு எழுதிய அணிந்துரையில் தாம் எழுதிய கருத்துக்களுக்கு நேர் மாறாக கருத்துகளை ஏன்

தன் ரசிகர்களிடம் பேச வேண்டும்? ஒரே துணிச்சல்தானே? தன்னுடைய ரசிகர் எவரும் தாம் குறிப்பிட்டு செல்கிற புத்தகத்தை வாங்கி படிக்கமாட்டார்கள் என்கிற ஆணவ திண்ணக்கம்தானே? அதாவது தன் ரசிகர்களின் அறியாமையை முதலீடாக்கி தம்மை அறிவுஜீவியாக்கும் இந்த ஒரு நிலை இந்த பேச்சு வியாபாரிக்கு தேவையா என்பதை அவர்தான் யோசிக்க வேண்டும். அது தன் சந்தை மதிப்பை குறைக்காது என்கிற துணிச்சலால் அதை குறித்து யோசிக்க வேண்டிய நேர்மையின் அவசியம் அவருக்கு இல்லை என்பது வேறு விசயம்.

## காஷ்மீர், 370 வது சட்டப்பிரிவு நீக்கம்: ஒரு பார்வை

**- பி.எஸ். நரேந்திரன்**

( நன்றி - தமிழ் இந்து )

காஷ்மீர் குறித்தான இந்தியர்களின் அறியாமை குறிப்பாகத் தமிழர்களின் மூடத்தனம் வேதனைக்குரியது. வாழ்க்கையில் ஒரே ஒரு புத்தகத்தைக் கூட படித்தறியாத இரண்டாம்தர, மூட, சினிமா நடிகன் போடுகிற கேவலமான ட்வீட்டுகளைப் படிக்கையில் நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன் என வெளியில் சொல்லக்கூட உண்மையில் வெட்கமாக இருக்கிறது. தமிழர்களின் அறியாமையே அவர்களை அழித்தது. அழித்துக் கொண்டிருக்கிறது. இனியும் அழியும்.

இந்தியா இன்றைக்கல்ல, என்றைக்குமே காஷ்மீரை விட்டுக் கொடுக்காது. கொடுக்கவும் முடியாது என்பது நிதர்சனம். அவ்வாறு விட்டுக் கொடுக்கும் நாளில் கணக்கற்ற நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து ஜனித்திருக்கும் பாரதவர்ஷம் மரணித்திருக்கும். மீளவே முடியாத படுகுழியில் இந்தியர்கள் வீழ்ந்திருப்பார்கள். ஹிந்துக்கள் இந்த மண்ணிலிருந்து மறைந்திருப்பார்கள். ரிக் வேதத்தின் பல பகுதிகளை எழுதியவராகக் கருதப்படுகிற, சப்த ரிஷிகளின் ஒருவரான காஷ்யப முனிவர் வாழ்ந்த பகுதியானதால் ‘காஷ்மிர்’ என அழைக்கப்படுவதனை உங்களில் பலர் அறிந்திருக்கலாம் அல்லது அறியாமலும் இருக்கலாம். ஆதிகாலம் தொட்டே காஷ்மிரிகள் சிவனை வணங்கும் தீவிர சைவர்கள்.

இஸ்லாமியப் படையெடுப்பாளர்களால் கட்டாயமாக மதம் மாற்றப்பட்ட நிலையிலும் அவர்கள் சிவனை வழிபடுவதனை நிறுத்தவில்லை. ஆனால் சென்ற இருநூறாண்டுகளில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

கட்டாயமாக மதம் மாற்றப்பட்ட நிலையிலும் காஷ்மீரத்து பிராமணர்கள் தங்களின் குலப் பெயர்களை (பட், வாணி, தர், கவுல், முன்ஷி, ரெய்னா, கன்னா, ரிஷி....) தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். என்றைக்கேனும் ஒருநாள் தங்கள் சந்ததிகள் மீண்டும் தாங்களின் தாய்மதமான ஹிந்து மதத்திற்குத் திரும்பி வருவார்கள் என்கிற ஆசையில் அந்த வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். ஆனால்

இன்றைக்கு அது மறக்கப்பட்டுவிட்டது. கடந்த ஐநூறாண்டுகால தொடர்ச்சியான கட்டாய மதமாற்றங்கள் காஷ்மிரிகளின் கலாச்சாரத்தை வேரறுறுத்துவிட்டது.

ஹர்ஷவர்த்தனனின் அரசில் அவருக்கு மந்திரியாக இருந்த கல்ஹானா காஷ்மீரின் வரலாற்றை எழுதியிருக்கிறார். “ஆற்றின் அரசர்கள்” எனப் பொருள்படும் “ராஜதரங்கிணி” காஷ்மீரை ஆண்ட அரசர்களின் வரலாற்றைக் குறித்துப் பேசுகிறது. இந்தியாவில் வேறெந்தப் பகுதியிலும் இதுபோன்ற ஹிந்து அரசகுலங்களைக் குறித்து எழுதப்பட்ட முழுமையான வரலாறு எதுவுமில்லை. பொதுயுகம் 653-இலிருந்து கல்ஹானா வாழ்ந்து மறைந்த 1266-ஆம் வருடம் வரை காஷ்மீரை ஆண்ட அரசர்களின் வரலாற்றை விளக்குகிறது

“ராஜதரங்கிணி”. அதையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டுக் காஷ்மீரை அடுத்தவனுக்குத் தூக்கிக் கொடுப்பது போன்ற கோழைத்தனம் வேறொன்றுமில்லை.

காஷ்மீரின் மீதான இஸ்லாமியப்படையெடுப்புகள் பொதுயுகம் 750-ஆம் வருடத்திலிருந்தே துவங்கிவிட்டன. இஸ்லாமிய காலி ஃப்பான அல்-மன்சூர், ஹசம்-பின்-அம்ரூ என்பவனை காஷ்மீரின் மீது படையெடுக்க அனுப்பினான். அதுவே காஷ்மீர் மீதான முதல் இஸ்லாமியப் படையெடுப்பு. அந்த முதல் படையெடுப்பில் “காஷ்மீர் ஹிந்து அரசனை அடக்கி, பல ஆயிரக்கணக்கானவர்களை சிறைக் கைதிகளாகவும்,அடிமைகளாகவும்” பிடித்துச் சென்றதாகக் குறிப்பிடுகிறான் அம்ரூ.

அதனைத் தொடர்ந்து காஷ்மீரை ஆண்ட இஸ்லாமிய அரசர்கள் கூட்டம் கூட்டமாக ஹிந்துக்களை மதமாற்றம் செய்தார்கள். அதனை எல்லாம் இங்கு எழுத இடமில்லை (இதனைக் குறித்து ஏற்கனவே பல கட்டுரைகளை எழுதியிருக்கிறேன், தமிழ்ஹிந்து.காமில்).

முகலாய அரசர்களின் காலத்தில் காஷ்மீரத்தில் கட்டாய மதமாற்றங்கள் துரிதப்படுத்தப்பட்டன. அதிலும் அவரங்ஸிப்பின் காலத்தில் மதமாற்றம் உச்சத்திற்குச் சென்றது. காஷ்மீர் முழுமையான இஸ்லாமியப் பகுதியாக மாறியதும் அப்போதுதான். இந்தத் துயரைத் தாங்க இயலாத காஷ்மீரி பண்டிட்டுகள் சீக்கிய குருவான தேஜ்பகதூரிடம் சென்று முறையிட்டார்கள். ஹிந்துக்களின் மீதான

இந்தக் கொடுமைகளை எதிர்த்தால் கோபமடைந்த அவ்ரங்ஸிப் சீக்கிய மதகுருவான குரு தேஜ்பகதூரையும் அவரது பாதுகாவலர்கள் இருவரையும் பிடித்துச் சித்திரவதை செய்து கொன்ற வரலாறு இருக்கிறது.

காஷ்மீரத்திற்கும் தென்னிந்தியாவிற்குமான தொடர்பு மிக ஆழமானது. ஆதிசங்கரரின் காலடிபட்ட மண் அது. சங்கரர் தனது சவுந்தர்யலஹரியை இயற்றிய இடமும் காஷ்மீரம்தான். ஸ்ரீநகருக்கு அவர் வந்து சென்றதற்கு அடையாளமாகக் கட்டப்பட்ட ஆலயம் இருக்கும் இடம் இன்றைக்கும் சங்கராச்சார்யா மலை (சங்கராச்சார்யா ஹில்) என்றே அழைக்கப்படுகிறது. துரதிருஷ்டவசமாக அவரது காலடிபட்ட

இன்னொரு இடமான சாரதா வித்யாபீடம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருக்கிறது.

இந்திய விடுதலைக்குப் பிறகு 1947-ஆம் வருடம் காஷ்மீரைத் தாக்கிய பாகிஸ்தானிகள் அங்கிருந்து பல ஆயிரக்கணக்கான ஹிந்து மற்றும் சீக்கியப் பெண்களைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். அந்தப் பெண்களில் பலர் முஸ்லிம்களுக்கு மணம் செய்து வைக்கப்பட்டனர்.

இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஜீலம் சந்தையில் ஏலம் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டார்கள். தங்களின் மதத்தைச் சாராத கா.ஃபிர்களின் மீது ஜிகாத் செய்து அவர்களைக் கொன்றுவிட்டுப் பின்னர் அவர்களின் பெண்களையும், சொத்துக்களையும் அபகரிப்பது

அல்லாவின் கட்டளை என முழுமையாக நம்புகிற முஸ்லிம்கள் இருக்கும்வரை இந்தியாவுக்கும், இந்திய ஹிந்துக்களுக்கும் எந்தப் பாதுகாப்பும் இல்லை.

பாகிஸ்தானின் நோக்கம் வெறுமனே இந்தியாவைப் பிடிப்பது மட்டுமில்லை என்பதினை நீங்கள் உணரவேண்டும். அவர்களின் நோக்கம் “கஸ்வா-எ-ஹிந்த்” என்பதினை உணராத இந்தியன், தமிழன் சில்லறை சினிமா நடிகனுக்குச் சமமானவன். “காஃபிர்களின் மீதான இறுதிப் போர் ஹிந்துஸ்தானத்தில் நடக்கும். அதில் வெல்லப்போகிற முஸ்லிம்களை வானத்திலிருந்து அல்லா இறங்கி வந்து வரவேற்று ஜன்னத்திற்கு அழைத்துப் போவார்” என்கிற மாதிரியானதொரு ஹதீசை முகமது

நபி சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அதுவே கஸ்வா-எ-ஹிந்த்! கா஁பிர் ஹிந்துக்களுக்கு எதிரான புனிதப்போர்!

இதை எத்தனை முஸ்லிம்கள் நம்புகிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் பாகிஸ்தானின் ஒவ்வொரு முஸ்லிமும் நம்புகிறான். பாகிஸ்தானிய அரசியல்வாதிகளும், ஜெனரல்களும் பூரணமாக அதனை நம்புகிறார்கள். அந்த ஒரு காரணத்திற்காகவே அவர்கள் பாகிஸ்தானை முன்னேற்ற எந்தவிதமான முயற்சியும் செய்வதில்லை. ஏனென்றால் இந்தியாவை வென்றால் எல்லா ஹிந்து கா஁பிரையும் அடிமையாக வைத்துக் கொள்ளலாம். அவன் சொத்துக்களை அபகரித்து சுகவாழ்வு வாழலாம். கணக்கற்ற கா஁பிரி

ஹிந்துப் பெண்களுடன் காம சுகம் கொள்ளலாம் என்கிற கனவுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வதை நம்புவதற்கு உங்களுக்குச் சிரமாக இருக்கலாம். என்ன செய்ய? உண்மையை நம்பச் செய்வதுதான் இந்தக் காலத்தில் கடினமாக இருக்கிறது.

இப்படி அல்லாவின் ஆணைப்படி காஷ்மிரைப் பிடித்து, அதன்பிறகு கஸ்வா-எ-ஹிந்த் புனிதப் போர் செய்து இந்தியாவைக் கொள்ளையடித்து சுகவாழ்வு என்கிற கனவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பாகிஸ்தானியர்களின் கனவை மோடியும், அமித்ஷாவும் தகர்த்து எறிந்தால் பாகிஸ்தானியன் என்ன செய்வான்? அல்லா தங்களை இப்படி அம்போவெனக் கைவிடுவான் என்று எதிர்பார்க்காததால்

புழுவாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அறியாமையில் உழலுகிற சில்லறை சினிமா நடிகனுக்காக இதனை நான் எழுதவில்லை. “உன்னைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தை நீ உணர்ந்து கொள்” என எச்சரிக்கவே இது எழுதப்பட்டிருக்கிறது.

புலிவால் பிடித்த நாயரும், காஷ்மிர் பிரச்சினையைப் பிடித்த பாகிஸ்தானும் ஒன்றுதான். விடவே முடியாத சிக்கல் அது. கொஞ்சமேனும் மூளை இருக்கிற நாடு இந்தப் பிரச்சினையைத் தூக்கிக் கடாசிவிட்டு தன்னுடைய முன்னேற்றத்தைப் பார்க்கப் போயிருக்கும். ஆனால் பாகிஸ்தான் ஒரு விசித்திரமான நாடு. தன்னுடைய மண்டை உடைந்தாலும் பரவாயில்லை அடுத்தவனின் மூக்கிலிருந்து ரத்தம் வரவேண்டும் என்கிற

எண்ணமுடையவர்களே அங்கு ஆட்சியிலும், அதிகாரத்திலும் இருக்கிறார்கள்.

இரண்டு நாடுகளும் பிரிந்து ஏறக்குறைய 72 ஆண்டுகள் தீராமல் இருந்த காஷ்மிர் பிரச்சினையை இந்தியா ஒரு முடிவுக்குக் கொண்டுவந்திருக்கிறது. ஏறக்குறைய “நீ பிடித்த ஏரியாவை நீயே வைத்துக்கொள்; எங்களிடம் இருப்பதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்” என்கிற முடிவுக்கு வந்த இந்தியா தீர்க்கமான, தீர்மானமானதொரு முடிவினை எடுத்திருக்கிறது. காஷ்மீர் பிரச்சினை காரணமாக இந்தியாவும், பாகிஸ்தானும் வீணடித்த பணம் கணக்கில் இல்லாதது. இரண்டுமே ஏழை நாடுகள் என்றாலும் இந்தியா தொழில்வளம் கொண்ட பெரியதொரு நாடு. எவ்வளவு செலவு வந்தாலும் தாக்குப் பிடிக்கும்

தன்மை இந்தியாவிடம் இருக்கிறது.

மறுபக்கம் பாகிஸ்தான் பரிதாபமானதொரு நிலையில் இருக்கிறது. இன்றுவரை ஒரு சாதாரண குண்டூசியைக் கூடச் சொந்தமாகத் தயாரிக்க வக்கில்லாத, இறக்குமதியை மட்டுமே நம்பிருக்கிற, சீனா, அமெரிக்கா, சவூதி அரேபியா போன்ற நாடுகள் போடும் பிச்சையில் பிழைத்துக் கிடக்கிற நாடு அது. விவசாயத்தை விட்டால் அந்த நாடு உருப்படியாகத் தயாரிப்பது எதுவுமில்லை. அரசு நிர்வாகம் என்று எதுவுமில்லை. பத்திரிகைச் சுதந்திரமோ அல்லது நீதித்துறை சுதந்திரமோ அங்கு இல்லை. எல்லாமே பாகிஸ்தானிய ராணுவத்தின் கையில் இருக்கிறது. ராணுவம் சொல்வதுதான் அங்கு எழுதப்படாத சட்டம். அரசாங்கத்தைக் கேள்வி கேட்கும் எந்தப்

பத்திரிகையாளனும் அதிக நாட்கள் உயிருடன் வாழ்வது சந்தேகம்தான்.

சிறுபான்மையினருக்கு அங்கு எந்த உரிமையுமில்லை. சக முஸ்லிம்களான அஹமதியாக்களை ‘கா஼பிர்கள்” எனத் தனது நாட்டு கான்ஸ்ட்டிடியூஷனில் (அரசியலமைப்புச் சட்டம்) எழுதி அவர்களை விரட்டியடித்த நாடு. இன்றைக்கும் அஹமதியாக்களுக்கும், ஷியாக்களும் பாகிஸ்தானில் பாதுகாப்பில்லை. ஹிந்துக்களின் நிலையோ இன்னும் கேவலமானது.

பாகிஸ்தானிய ஹிந்துக்கள் நாய்களை விடவும் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் பல நூற்றுக்கணக்கான ஹிந்துப் பெண்கள் தூக்கிச் செல்லப்பட்டு,

முஸ்லிம்களாக மதம் மாற்றப்பட்ட பின்னர் முஸ்லிம்களுக்கு நிக்காஹ் செய்து வைக்கப்படுகிறார்கள். பெண்களை இழந்த ஹிந்துப் பெற்றோர்களின் கதறல்களை எந்த இம்ரான்கானும் கேள்வி கேட்பதில்லை. கிறிஸ்தவர்களின் நிலையோ ஹிந்துக்களின் நிலைக்கு எந்தவிதத்திலும் குறைவில்லை. கொல்லப்படும் கிறிஸ்தவர்களையும், எரிக்கப்படும் சர்ச்சுகளையும் குறித்துக் கேள்விகேட்க எவனுமில்லை.

பலூச்சிஸ்தானில் நடக்கும் கொடுமைகளை எழுதவே கை கூசுகிறது. அப்பாவி பலூச்சிகள் நித்தமும் கொல்லப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். சிந்திக்களின் நிலையும் அதுவேதான். பாகிஸ்தான் என்றால் பஞ்சாபிகள் மட்டும்தான். பஞ்சாபிகள் தவிர வேறொருவர்

எவருக்கும் எந்த உரிமையும் இல்லை எனபதுவே இன்றைய நிலைமை. பாகிஸ்தான் பிடித்துவைத்திருக்கும் காஷ்மீரில் நிலைமை என்ன? பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிகள் பாகிஸ்தானிகளை வெறுக்கவல்லவா செய்கிறார்கள்?

நிலைமை இப்படி இருக்க, பாகிஸ்தான் பிரதம மந்திரியான(!) இம்ரான்கான் அந்த நாட்டுப் பாராளுமன்றத்தில் “இந்தியா ஒரு இனவெறி பிடித்த நாடு. அங்கு சிறுபான்மை சமூகங்களுக்குப் பாதுகாப்பில்லை. முஸ்லிம்களை அடித்துக் கொல்கிறார்கள்” என்று புளுகுகிறான். “திப்புசுல்தான் மாதிரி சாகும்வரை போர் புரியப் போவதாக” மிரட்டுகிறான். “புல்வமாக்கள் மீண்டும் நடக்கும்” எனப் புலம்புகிறான்.

இந்தியாவில் அப்படியா நடக்கிறது? பெரும்பான்மை ஹிந்துக்களை அல்லவா இந்திய நாட்டுச் சட்டங்கள் அடக்கி ஆள்கின்றன? தங்களுக்கும் சிறுபான்மையினரைப் போல சம உரிமை வேண்டும் என்றல்லவா இந்த நாட்டு ஹிந்துக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்? இம்-த-டிம் மீண்டும், மீண்டும் தனது அறியாமையை, மதவெறியை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறான்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்த இந்தியா இன்று இல்லை. தன்னை எல்லா விதத்திலும் பலப்படுத்திக் கொண்ட, பலப்படுத்திக் கொண்டுருக்கும் இந்தியா இது. பாகிஸ்தானின் எல்லைகளைத் தொடந்து கண்காணிக்கும் சாட்டிலைட்டுகளும், உளவு விமானங்களும்

தொடர்ந்து பறந்து கொண்டிருக்கின்றன. அதையும் மீறி உள்ளே நுழைபவனின் கதி என்ன என்பதனை பாக்கிஸ்தானி பயங்கரவாதிகளும், ராணுவமும் நன்கு அறிவார்கள்.

முன்பெல்லாம் பிடிபடுகிற பாகிஸ்தானி பயங்கரவாதிகளைக் கைது செய்து சிறையில் அடைத்த இந்தியா இன்றைக்கு அங்கே அவர்களைக் கொல்கிறது. பயங்கரவாதிகளின் மீது மென்மையான நடவடிக்கை எடுத்த காங்கிரஸ் அரசாங்கமல்ல இன்றைக்கு இருப்பது. இன்னொரு புல்வாமா நிகழ்ந்தால் என்ன நடக்கும் என்பது பாகிஸ்தானிய ராணுவத்திற்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அப்படியானதொரு நிகழ்வினை நிகழ்த்திக்காட்ட அவர்கள் தொடர்ந்து முயல்வார்கள் என்பதிலும் சந்தேகமில்லை.

முன்பைப் போலல்லாமல் இன்றைக்கு இந்திய ராணுவமும், அரசாங்கமும் அதற்குத் தயாராகவே இருக்கிறது.

ஐ.நா. சபையில் முறையிடுவோம், பிரச்சினையைக் கிளப்புவோம் என்றெல்லாம் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறது பாகிஸ்தான். இன்றைக்கு எந்த உலக நாடும் வளர்ந்துவரும் பொருளாதார சக்தியான இந்தியாவை எதிர்த்துக் கொண்டு திவாலான பாகிஸ்தானுக்கு உதவ முன்வரவே மாட்டார்கள். அங்கு போய் கத்திவிட்டு வரலாம். அவ்வளவுதான். அதற்குமேல் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அமெரிக்காவே அந்தர் பல்டியடித்துவிட்டது. ஐரோப்பிய நாடுகள் எப்போதும் அமெரிக்காவைத்தான் பின்பற்றும். கருத்துச் சொல்லும்.

அமெரிக்காவே "அது இந்தியாவின் உள் நாட்டுப் பிரச்சினை" என்று கை கழுவிய பின்னர் வேறெந்த ஐரோப்பிய நாடும் அதனை மாற்றிச் சொல்ல முன்வராது.

என்னைக் கேட்டால் பாகிஸ்தானுக்கு இதுவொரு அருமையானவாய்ப்பு. எத்தனை கத்தினாலும், புல்வாமாக்கள் செய்தாலும் இந்தியா காஷ்மிரை ஒருபோதும் விட்டுத் தராது. பதிலுக்கு மூக்கு உடைபடுவதுதான் மிச்சமாகும். எனவே பாகிஸ்தான் தனது பொருளாதாரத்திற்காக, இத்தனை நாட்கள் நினைத்துப்பார்த்திருக்காத தனது மக்களின் நல வாழ்விற்காகத் தனது சக்தியைச் செலவிட வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் பத்தாண்டுகளில் பாகிஸ்தான் என்கிற நாடே உலக வரைபடத்தில் இல்லாமல் போகக்கூடிய

சாத்தியங்கள் இருக்கின்றன.

பாகிஸ்தானிய ராணுவத்தின் அதிகாரங்களைப் பிடுங்கி அவர்களை அடக்கிவைத்தால் மட்டுமே அது சாத்தியம். ஆனால் அதற்குத் துணிச்சலான தலைமை வேண்டும். அந்தத் தலைமை இன்றைக்குப் பாகிஸ்தானில் இல்லை. எதிர்வரும் காலத்திலும் அதுபோன்றதொரு தலைமை வருவதற்கான சாத்தியங்கள் கண்ணில் தென்படவில்லை. படித்தவர்கள், நேர்மையான சிந்தனையுடையவர்கள் பாகிஸ்தானில் அருகி விட்டார்கள். உண்மையான அறிவாளிகள், சிந்தனையாளர்களில் பெரும்பாலோர் பாகிஸ்தானை விட்டுச் சென்றுவிட்டார்கள்.

இன்றைய பாகிஸ்தான் சுயநலமிகளால், சிந்தனையற்ற மூடர்களால்,

கண்மூடித்தனமான மதவாதிகளால் இயக்கப்படுகிற ஒன்று. அதுபோன்றதொரு தேசத்தில் வாழ்கிற மக்கள் பரிதாபத்திற்குரியவர்கள்.

**ஜெய் ஹிந்த்.**




**⁕இதழ் முற்றும்⁕**